குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ) / தனி அலுவலர்
வடக்குத்து ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை. திரு.கு.அசோக்பாபு

ந.க.எண்.ஆ1/ 2120 /18

நாள். 15. 10.2018

பொருள்:– அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – ஊராட்சி ஒன்றியம் குறிஞ்சிப்பாடி – வடக்குத்து ஊராட்சி – வடக்குத்து கிராமம் – ச.எண் 47/1H1A, 47/1H1B, 47/1H2 ஆகியவற்றில் 25.60 ஏக்கர் (அ) 1115136.00 சதுரஅடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாரதா கார்டன் – மனைப்பிரிவு வரன்முறைபடுத்தி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பு.

பார்வை:–
1. மனுதாரர் திருமதி.G.பழனிவேல் மற்றும் R. அமுதா, என்பவர்களின் விண்ணப்பம் நாள் .09.18.
2. அரசாணை எண் 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் 04.05.17
3. அரசாணை எண்172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD(3)) துறை நாள் 13.10.17 .
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண் 809 / 2018 விம நாள்.07.09.18.
5. வடலூர் – சார் பதிவாளர் அலுவலக பத்திர எண் : 2655 / 18

❖❖❖❖

உத்தரவு

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம், ச.எண் 47/1H1A, 47/1H1B, 47/1H2 உள்ளடக்கிய 25.60 ஏக்கர் (அ) 1115136.00 சதுரஅடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாரதா கார்டன் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களால் கொ.ஒ.ம./ந.ஊ.இ.(வி.ம) எண் R966 /2018 என எண்ணிடப்பட்டு பார்வை 4–ல் காணும் உத்தரவு வாயிலாக கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது இடங்களை மனுதாரால் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் / வடக்குத்து ஊராட்சி தனி அலுவலர் பெயருக்கு தானமாக அளிக்கப்பட்டு வடலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு எண்.2655 / 18 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் விற்பனை செய்யப்படாத 433 மனைகளின் பரப்பளவான 803880.00ச.அடி (அ) 67149.00 ச.மீ–க்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணமாக ச.மீ–க்கு ரூ.30.00 வீதம் மற்றும் வளர்ச்சி கட்டணமாக ச.மீ–க்கு ரூ.25.00 வீதம் பின்வரும் விபரப்படி மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

| மனை எண் | சர்வே எண் | பரப்பளவு | சதுர மீட்டருக்கு வரன்முறை கட்டணம் ரூ.30/– வீதம் | சதுர மீட்டருக்கு வளர்ச்சி கட்டணம் ரூ.25/– வீதம் |
|---|---|---|---|---|
| 433 மனைகள் | 47/1H1A, 47/1H1B, 47/1H2 | 803880 ச.அடி (அல்லது) 67149 ச.மீ | ரூ. 2114470/– (குறிஞ்சிப்பாடி கிளை கருவூலத்தில் செ.சீ.எண் 26 / 11.10.18 மூலம் செலுத்தப்பட்டுள்ளது) | ரூ. 1678725/– (இந்தியன் வங்கி குறிஞ்சிப்பாடி கிளை வங்கி வரைவு எண் 882568 & 882569 நாள்11.10.18) |

மேற்படி மனைப்பிரிவு வரன்முறை செய்திட வடக்குத்து ஊராட்சி தீர்மானம் எண்.229/2018 மூலம் வடக்குத்து ஊராட்சி தனி அலுவலரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிஞ்சிப்பாடி வட்டம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து கிராமம், ச.எண்.47/1H1A.,47/1H1B,47/1H2 உள்ளடக்கிய 25.60 ஏக்கர் (அ) 1115136.00 சதுரஅடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள சாரதா கார்டன் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு விழுப்புரம் மண்டல நகர் ஊரமைப்பு, உதவி இயக்குநர் அவர்களால் கொ.ஒ.ம./ந.ஊ.இ.(வி.ம) எண் R966 /2018 என எண்ணிடப்பட்டு கொள்கையளவில் பார்வை 4–ல் காணும் உத்தரவு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டவாறு மற்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சாரதா கார்டன் மனைப்பிரிவை வரன்முறைப்படுத்தி இறுதி அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு விற்பனை செய்யப்படாத 433 மனைகளுக்கு மட்டும் பொருந்தும். ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனைகளை வரன்முறைப்படுத்திட மனை உரிமையாளர்கள் தனியாக விண்ணப்பத்திட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு** – 1. வரைபடம்

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண் 809 / 2018 விம நாள்.07.09.18. வழங்கப்பட்ட ஒப்புதல் மற்றும் நிபந்தனைகள்

வட்டார வளர்ச்சி அலுவலர்(கிஊ),
குறிஞ்சிப்பாடி மற்றும்
தனி அலுவலர் வடக்குத்து ஊராட்சி

பெறுதல்

1. திரு. G.பழனிவேல்
த/பெ. கோவிந்தசாமி,
கீழ்வடக்குத்து, வடக்குத்து அஞ்சல்,
குறிஞ்சிப்பாடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

2. திருமதி.R.அமுதா,
க/பெ. இராஜசேகரன்,
எண்.C.6 மாலை சதுர வீதி
வட்டம் –15 நெய்வேலி–3

நகல்

1. மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (ஊ) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. சார் பதிவாளர், வடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.